பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை

11 06 2025 **WENDESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சமூக பாதுகாப்புத் திட்டங்களின்மூலம் பயனடைவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. வளர்ச்சியை மட்டுமே முன்நிறுத்தி மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தனித்துப்போட்டியிட தயாரா என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.
4. ராணிப்பேட்டை, திருவண்ணாமலை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>

மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள்மூலம் பயனடைவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவின் பதிவை பகிர்ந்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின்கீழ், சமூக பாதுகாப்புத் திட்டங்களில் பயனடைவோர் எண்ணிக்கை நடப்பாண்டில் 64 புள்ளி மூன்று சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பும் இதனை உறுதி செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உலக அளவில் சமூக பாதுகாப்புத் திட்டங்களினால் அதிகமாக பயனடைவோர் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு கூறியுள்ளது.

இதன்படி 94 கோடிக்கும் மேற்பட்டோர் இந்த திட்டங்களினால் பயனடைந்து வருகின்றனர்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக வளர்ச்சியை மட்டுமே முன்நிறுத்தி செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மகளிர், விவசாயிகள், இளையோர் மற்றும் ஏழைகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் மத்திய இணையமைச்சர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து, நாமக்கல் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அம்ரித் பாரத் திட்டப்பணிகளை ஆய்வு செய்த திரு எல். முருகன், நெல்லை – கத்ரா இடையேயான விரைவு ரயிலை நாமக்கல் வழியாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

<<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தனித்துப்போட்டியிட தயாரா என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக பலமான கட்சி என்றால், தனியாக போட்டியிட தயங்குவது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்கியுள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தி தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பிரதமரின் தொலைநோக்கு திட்டம்.

<<<<<<>>>>>

ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோவை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 37 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று வழங்கினார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

----------------

மயிலாடுதுறை அருகே மின்சாரம் தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

<<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் **Munich**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவு தகுதிச்சுற்று ஆட்டத்தில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-------------

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான முதலாவது ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் சற்றுமுன் தொடங்கியது.

<<<<<<**END**>>>>>